சுருக்கம்

பள்ளிக்கல்வி – சமச்சீர் கல்வி திட்டம் – அனைத்து பள்ளிகளில் பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறை நடைமுறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (க்யூ1) துறை

அரசாணை (நிலை) எண்.21 நாள் 01.02.2010.
(தை 19, திருவள்ளுவர் ஆண்டு 2041)

படிக்கப்பட்டவை.

பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதங்கள் ந.க.எண்.85300/ஜ/2009, நாள் 24.9.2009 1.12.2009 மற்றும் 7.12.2009.

-----

ஆணை:-

சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த ஏதுவாக தமிழ்நாட்டில் இயங்கும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் சுயநிதி பள்ளிகள் அனைத்துக்கும் ஒரே மாதிரியான சிறந்த தரம் உடைய பாடத்திட்டம், பாடநூல் மற்றும் தேர்வு முறையை பின்பற்றுவதன் மூலம் தமிழகத்தில் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்தலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கேற்ப பாடதிட்டம் மற்றும் தேர்வு முறை ஆகியவை குறித்து பள்ளிக்கல்வி இயக்குநருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டது.

2. சமச்சீர் கல்வி திட்டத்தின் கீழ் பின்பற்றப்பட வேண்டிய பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறையை பின்வருமாறு வகுத்து அரசு ஆணையிடுகிறது :

(i). பாடத்திட்டம்:-

அனைத்துப் பள்ளிகளும் 6 முதல் 10ம் வகுப்பு வரை பின்பற்றுவதற்கு ஏதுவாக கீழ்க்கண்டவாறு பாடத்திட்டம் (The Subjects of study) அமைக்கப்படும் :

| | |
|---|---|
| பகுதி 1 | தமிழ் (கட்டாயம்) |
| பகுதி 2 | ஆங்கிலம் (கட்டாயம்) |
| பகுதி 3 | கணிதம்<br>அறிவியல்<br>சமூக அறிவியல் |
| பகுதி 4 | தமிழ் அல்லது ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்டிராத மாணவர்கள் அவர்தம் தாய்மொழியை ஒரு விருப்பப் பாடமாக கற்கலாம். |

(ii) தேர்வுமுறை:-

சமச்சீர் கல்வித் திட்டத்தில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் ஒன்பதாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வு மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு (Board Examinations) பின்வரும் தேர்வுமுறை நடைமுறைப்படுத்தப்படும்:

| பாடங்கள் | தாள் 1 | தாள் 2 | கூடுதல் | மதிப்பெண் சான்றிதழில் பதியும் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| தமிழ் | 100 | 100 | 200 | 100 |
| ஆங்கிலம் | 100 | 100 | 200 | 100 |
| கணிதம் | 100 | --- | 100 | 100 |
| அறிவியல் | கருத்தியல் தேர்வு 75<br>செய்முறை தேர்வு 25 | --- | 100 | 100 |
| சமூக அறிவியல் | 100 | --- | 100 | 100 |
| | | | மொத்தம் | 500 |

6, 7 மற்றும் 8ஆம் வகுப்புகளைப் பொறுத்தவரை அனைத்து வகைப் பள்ளிகளிலும், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தேர்வுத் தாள் தலா ஒன்று மட்டுமே இருக்கும்.

3. மேற்கூறியவாறு பாடத்திட்டம் மற்றும் தேர்வு முறையை நடைமுறைப் படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொடக்கக்கல்வி இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், மற்றும் அரசு தேர்வுகள் இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தபடுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்
சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை–6
நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக்கல்வித் (வ.செ) துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.2.10
பிரிவு அலுவலர்.
2.2.10.